ஐ.டி.எண்.65/2022 04.06.2026

<u>நி.த.சாட்சி .1 அப்துல்ரஹீம் குறுக்கு விசாரணை</u>

எதிர்மனுதாரர் தொழிற்சாலையின் உரிமையாளர் நான் தான் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுவனம் தோல் சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளது என்றால் சரிதான். நான் தோல் சுத்திகரிப்பு முதலாளிகளின் சங்கத்தில் உறுப்பினர் என்றால் சரிதான். தோல் சுத்திகரிப்பில் ஈடுபடும் பணியாளர்களுக்கு சம்பளம், போனஸ், ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் அனைத்தும் மாநிலம் தழுவிய 12(3) செட்டில்மெண்ட்டின் படி நிர்ணயிக்கப்படும் என்றால் சரியல்ல. ஆனால் அவை அனைத்தும் சம்மந்தப்பட்ட தொழிற்சங்கத்திற்கும் நிறுவனத்திற்கும் இடையே ஏற்படுத்தப்படும் 12(3) செட்டில்மெண்ட்டின் படி வழங்கப்படும். இந்த 12(3) செட்டில்மெண்ட் ஆனது இணை தொழிலாளர் உதவி ஆணையர் முன்னிலையில் இருதரப்பினரும் கையொப்பமிட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றால் சரிதான். எங்கள் தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவரும் நிரந்தர பணியாளர்கள். அவர்களுக்கு நான் மாதம் மாதம் சம்பளம் வழங்குவதில்லை அவர்களுக்கு நான் தினக்கூலி தான் வழங்குவேன். இந்த வழக்கின் மனுதாரர் சரவணன் 1994ம் வருடம் பணியில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. பணியில் சேர்ந்த நாள் முதல் பணிநீக்கம் செய்யப்படும் காலம் வரை அவர் தினக்கூலியாக தான் பணியில் இருந்தார் என்றால் சரிதான். தற்பொழுது எதிர்மனுதாரர் தொழிற்சாலை இயங்கவில்லை தற்போது மூடப்பட்டுவிட்டது. வழக்கு நிலையில் இருக்கும் பொழுது மனுதாரரும் நாங்களும் சமரசமாக வழக்கை முடித்துக்கொள்ள தீர்மானித்தோம் என்றால் சரிதான். மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் சுமார் 26 ஆண்டு காலம் பணிபுரிந்தார் என்றால் சரியல்ல. அவர் 21 ஆண்டுகள் தான் பணிபுரிந்து உள்ளார். அதனால் அவருக்கு ரூ.2,03,000/- தர நான் தயாராக இருக்கிறேன். மேலும் கொரோனா காலக்கட்டத்தின் பொழுது மனுதாரருக்கு சம்பளத் தொகையாக ரூ.35,000/- அளித்துள்ளேன். அந்த தொகையை கழித்தது போக ரூ.1,68,000/- நான் தர தயாராக உள்ளேன். 2018ம் ஆண்டு அரசாங்கமானது தோல் சுத்திகரிப்பு பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.160/- நிர்ணயம் செய்தது என்றால் சரிதான். ஆனால் நான் பணியாளர்களுக்கு அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.125.79/- அளித்தேன் என்றால் சரிதான். 2017ம் ஆண்டு போடப்பட்ட 12(3) செட்டில்மெண்ட்டின்

காணப்படும் சரத்து 1ல் நிர்வாகம் ஏற்கனவே அளிக்கும் ஊதியத்துடன் நிர்வாகம் நாள் ஒன்றுக்கு ரூ.31 கூடுதலாக அளிக்க வேண்டும் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2017ம் ஆண்டு போடப்பட்ட 12(3) செட்டில்மெண்ட் தான் அது **தொ.த.சா.ஆ.2**. அரசாங்கம் நிர்ணயித்த தொகை மற்றும் 12(3) செட்டில்மெண்ட்ன் படி ஊழியர்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ.191/- ஊதியமாக வழங்க வேண்டும் என்றால் 31 ரூபாயை நான் சேர்த்து தான் நான் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கியுள்ளேன். அவ்வாறு நான் வழங்கினேன் என்பது உண்மையில்லை என்றால் சரியல்ல. அகவிலைப்படி பொருத்தமட்டில் ஒவ்வொரு மாதமும் கன்சூமர் இன்டக்ஸ் பாயின்ட் மாறும் என்றால் சரிதான். அந்த இன்டக்ஸ் பாயின்ட்டிற்கு ஏற்றார்போல் ஒவ்வொரு மாதமும் நான் கணக்கீடு செய்து அகவிலைப்படி வழங்கவேண்டும் என்றால் சரிதான். ஒவ்வொரு மாதமும் 176 மேல் உள்ள ஒவ்வொரு புள்ளிகளுக்கும் தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்படவேண்டும் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த நி.த.சா.ஆ.4ல் அகவிலைப்படி வழங்கப்பட்டது குறித்த விவரங்கள் காணப்படுகிறது எவ்வாறு அந்த அகவிலைப்படி தொகையானது ரூபாய்.221.42 ஆக கணக்கிடப்பட்டது என்றால் ஒவ்வொரு மாதமும் நான் சார்ந்த சங்கத்தில் இருந்து அகவிலைப்படி குறித்து சுற்றறிக்கை வரும் அதன் அடிப்படையில் தான் அந்த தொகை வழங்கப்பட்டது. அந்த சுற்றறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த நி.த.சா.ஆ-5ல் 2018 - 2019ம் ஆண்டிற்கான இன்டக்ஸ் புள்ளிகள் குறித்து காணப்படுகிறது. 176க்கு மேல் வரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் 90 பைசா வீதம் கணக்கிட்டு வழங்கப்பட்டது. இது குறைந்தபட்ச அகவிலைப்படி என்றால் சரிதான். அரசாணையில் ஒரு புள்ளிக்கு 90 பைசா வீதம் நிர்ணயம் செய்யப்பட்டது ஆனால் 12(3) ஒப்பந்தத்தின் படி ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ.3.15/- காசு வீதம் வழங்கப்பட வேண்டும் நான் அந்த தொகையை தான் வழங்கினேன். நான் அரசாங்கம் நிர்ணயித்த அகவிலைப்படி தொகையையும் 12(3) ஒப்பந்தத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்ட அகவிலைப்படி தொகையை விட குறைவாக தான் வழங்கினேன் என்றால் சரியல்ல. அகவிலைப்படி எவ்வாறு கணக்கிடப்பட்டது என்ற விவரங்களை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் தான் நான் சரியாக வழங்கினேனா அல்லது குறைவாக வழங்கினேனா என்பது தெரிய வரும் என்றால் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அகவிலைப்படி எவ்வாறு கணக்கீடு

செய்யப்படும் என்பதைக் காட்டும் ஆவணம் என்றால் சரிதான். அது **தொ.த.சா.ஆ-3**. இந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் அகவிலைப்படி கணக்கிட்டு வழங்கவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு மாதமும் அகவிலைப்படி கூடுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் அகவிலைப்படி குறைவதற்கும் வாய்ப்புள்ளது. அகவிலைப்படி புள்ளிகள் குறைவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 12(3) ஒப்பந்தத்தின் படி நான் தொழிலாளர்களுக்கு சலவைப்படி வழங்கினேன். சட்டப்படி தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய அகவிலைப்படி அடிப்படை சம்பளம் ஆகியவற்றை நான் வழங்கவில்லை என்றால் சரியல்ல. தொழிலாளர்கள் தங்களுக்கு சட்டப்படியாக கிடைக்க வேண்டிய பணப்பலன்கள், குறைந்தபட்ச ஊதிய தொகை மற்றும் போனஸ் ஆகியவற்றை கேட்டதற்காக அவர்களை வேலை நீக்கம் செய்ய நான் முயற்சித்தேன் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பின் படி நாங்கள் தொழிற்சாலையை மூடினோமா என்றால் அதற்கு முன்னதாகவே நாங்கள் மூடிவிட்டோம். தனிப்பட்ட முறையில் தொழிற்சாலை மூடப்பட்டது குறித்து தொழிலாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை அறிவிப்பு பலகையில் இது குறித்து நாங்கள் அறிவிப்பு ஒட்டினோம். தொழிலாளர்களுக்கு நாங்கள் குளோசர் காம்பன்சேசன் அளிக்கவில்லை. நாங்கள் ஆட்குறைப்பு செய்தது மற்றும் தொழிற்சாலையை மூடியது அனைத்தும் சட்ட விரோத செயல்கள் என்றால் சரியல்ல. கோவிட் காலக்கட்டம் மார்ச் 2020 முதல் மே 2023 வரை இருந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நி.த.சா.ஆ.2க்கான ரசீதிற்கான தொகைகள் அனைத்தும் கோவிட் ஆரம்பக்கட்டத்தில் இருந்து தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த காலக்கட்டத்தை தவிர்த்து இதர காலங்களில் தொழிலாளர்களுக்கு அட்வான்ஸ் தொகை வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அட்வான்ஸ் தொகை வழங்கும் பழக்கம் எங்கள் கம்பெனியில் இல்லை நான் தந்ததும் இல்லை என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டு மனுதாரர் அட்வான்ஸ் தொகை வாங்கினாரா என்று எனக்கு குறிப்பாக ஞாபகம் இல்லை. நான் அட்வான்ஸ் தொகையாக கொடுத்தது கோவிட் காலக்கட்டத்திற்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்காக அளித்த தொகை என்றால் சரியல்ல. மனுதாரர் 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றினார் என்பதை நாங்கள் மறுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு

ஆட்குறைப்பிற்கான தொகை, தொழிற்சாலை மூடப்பட்டதற்கான தொகை, பணிக்கொடை மற்றும் பின்தேதியிட்ட சம்பளம் ஆகியவற்றை நாங்கள் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.06.04 17:34:49 +0530